# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1990, மாச்சு மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.55

## 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1990, மார்ச்சு 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 15/88

### குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் அத்தியாயத்தில் 14அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 101 ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது 14அ என்னும் பிரிவு என்றுற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"எந்த ஆளுக்கெதிராக ஏதேனும் நிவாரணம் உளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆள் இறக்குமிடத்துப் பதிவீடும் அத்துடன் நிவாரணத்திற்கென வழக்குத் தொடுக்கும் உரிமை எஞ்சியிருக்குமிடத்தும்.

14அ. (1) எந்த ஆளுக்கெதிராக ஏதேனும் நிவாரணத்திற்காக உரிமை உளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆள் இறக்குமிடத்தும் அத்துடன் அந் நிவாரணத்திற்கென வழக்குத் தொடுக்கும் உரிமை எஞ்சியிருக்குமிடத்தும் எந்த ஆளில் அத்தகைய உரிமை உளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆள் அதற்கான வழக்கொன்று எந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்படலாமோ அந்த நீதிமன்றத்தில் பின்வரும் முறையில் சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன் சுருக்கமுறை நடவடிக்கை என்ற வகையில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:—

(அ) அத்தகைய ஆள் மரண சாதனமில்லாமல், சொத்தொன்றை விட்டு இறந்துள்ளவிடத்து, அவர் 304 (2) ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு காலஞ் சென்றவரின் சட்டமுறையான பிரதிநிதியாக எந்த ஆளை சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளும் உத்தேச வழக்கில் காலஞ் சென்றவரின் இடத்தில் எந்த ஆளை எதிராளியாக்க விரும்புகின்றாரோ அந்த ஆளுமாகிய எவரேனும் ஆளின் பெயர், விவரணம், வாழுமிடம் என்பனவற்றைக் குறிப்பிட்டு அத்தகைய விண்ணப்பம், விண்ணப்பகாரர் எந்த ஆளை அல்லது ஆட்களை காலஞ் சென்றவரின் வேறு மரபுரிமையாளராக அல்லது மரபுரிமையாளர்களாக இருப்பதாக சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயர், விவரணம், வாழுமிடம் என்பவற்றையும் குறித்துரைத்தல் வேண்டும்; அல்லது

2—டீ 007511—1,915 (89/12)

(ஆ) காலஞ் சென்றவரின் மரணச் சொத்துக்கான விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகப் பத்திரம் வழங்கப்பட்டில்லாதவிடத்து அல்லது அதன் வழங்கல் தகாதவாறு தாமதமாகக்கூடிய சாத்தியக்கூறு இருக்குமிடத்து, காலஞ் சென்றவரின் விருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்துக்கான மரணசாதன அதிகாரப் பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளும் உத்தேச வழக்கில் காலஞ்சென்றவரின் இடத்திற்கு எந்த ஆளை எதிராளியாக்க விரும்புகின்றாரோ அந்த ஆளுமாகிய எவரேனும் ஆளின் பெயரையும், விவரணத்தையும் வாழுமிடத்தையும் குறித்துரைத்து அத்தகைய விண்ணப்பம் விண்ணப்பகாரர் எந்த ஆளை அல்லது ஆட்களை காலஞ் சென்றவரின் மரபுரிமையாளராக அல்லது மரபுரிமையாளர்களாக இருப்பதாக சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரையும் விவரணத்தையும் வாழுமிடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன் மீதும் அத்துடன் அதற்கான ஏதுக்கள் உள்ளன என நீதிமன்றம் திருப்தியுறுமிடத்தும் அத்தகைய விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிக்கும் அத்துடன் அத்தகைய வேறு ஆட்கள் இருப்பின் அவர்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னரும் அத்துடன் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை (முதலாம் அட்டவணையில் 24 ஆம் இலக்கப் படிவத்தில்) நீதிமன்றத்தால் தெரிவு செய்யப்பட வேண்டிய உள்ளூர் செய்தித் தாளொன்றில் அல்லது அத்தகைய வெளியீட்டிற்குப் பதிலாக நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் விளம்பரப் படுத்தச் செய்ததன் பின்னரும் அத்துடன் அவசியமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும் அத்துடன் அது

பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் நீதிமன்றமானது அத்தகைய பிரதிநிதி அல்லது பொருத்தமானவரென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஆள் அத்தகைய வழக்கைத் தொடுப்பதற்குக் காலஞ்சென்றவரின் இடத்திற்கு நியமிக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்;

ஆயினும், காலஞ்சென்றவரின் இடத்திற்கு அவ்வாறு நியமிக்கப்படும் ஆள், அவர் காலஞ்சென்றவரின் சட்டபூர்வமான பிரதிநிதி அல்ல என அல்லது அவர் காலஞ்சென்றவரின் இடத்திற்கு நியமிக்கப்படக்கூடாதென ஆட்சேபிக்கலாம்.

(3) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன் மீது, காலஞ் சென்றவரின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரண சொத்துக்கான மரணச்சொத்து நிர்வாகப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லையென அல்லது முறையில்லாது தாமதப்படும் சாத்தியமுண்டென நீதிமன்றம் திருப்தியுறுமிடத்தும் அத்துடன் காலஞ் சென்றவரின் மரணச் சொத்துக்கான விருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச்சொத்துக்கான மரணச் சொத்து நிர்வாகப்பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளாக அல்லது அத்தகைய வேறு ஆட்கள் எவரும் இருப்பின் அவ்வாட்களாக இருப்பதாக அத்தகைய விண்ணப்பத்தில் சார்த்துரைக்கப்பட்ட ஆளின்மீது அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னரும் அத்துடன் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை (முதலாம் அட்டவணையில் 24 ஆம் இலக்கப் படிவத்தில்) நீதிமன்றத்தால் தெரிவு செய்யப்படவேண்டிய உள்ளூர் செய்தித் தாளொன்றில் அல்லது அத்தகைய வெளியீட்டிற்குப் பதிலாக நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் விளம்பரப்படுத்தச் செய்ததன் பின்னரும் அத்துடன் அவசியமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும் அத்துடன் பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் காலஞ் சென்றவரின் விருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப் பத்

திரம் அல்லது மரணசாதன நிருவாகப் பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளாக நீதிமன்றத்திற்குத் தோன்றும் ஆள், அத்தகைய வழக்கைத் தொடுப்பதற்கென காலஞ்சென்றவரின் இடத்திற்கு நியமிக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

ஆயினும், அல்லது நியமிக்கப்படவுள்ள ஆள், காலஞ்சென்றவரின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச் சொத்துக்கான மரணசாதன நிருவாகப் பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்பட வேண்டுமோ அந்த ஆள் தாமல்ல என அல்லது தாம் காலஞ்சென்றவரின் இடத்திற்கு நியமிக்கப்படக் கூடாதென ஆட்சேபிக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நீதிமன்றமானது அவ்வுட்பிரிவுகளுள் ஏதேனுமொன்றின்கீழ்—

(அ) வழக்குத் தொடுத்தலிலான தாமதம் காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் காரணமாக அத்தகைய வழக்கை நடத்த முடியாததாகிவிடும் எனத் திருப்திப்படுமிடத்து; அல்லது

(ஆ) காலஞ்சென்றவரின் இறப்பிற்குப் பின்னர் ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி கழிந்துள்ளவிடத்து மட்டும்

கட்டளையொன்றை ஆக்கலாம்.

(5) காலஞ் சென்றவரின் இடத்திற்கு (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதிநிதியொருவரை நியமிக்கும் கட்டளையொன்றுக்குப் பின்னரும் அத்துடன் அத்தகைய காலஞ்சென்றவரின் இடத்திற்குப் பதிலாக அத்தகைய ஆளுக்கெதிராக வழக்கொன்று தொடுக்கப்பட்ட பின்னரும் விடயத்திற்கேற்ப, அத்தகைய காலஞ்சென்றவரின் விருப்பாவணத்தின் மரணசாதனத் தத்துவக்காரரொருவர் அல்லது மரணச்சொத்தின் உரிமைத் தத்துவக்காரர் ஒருவர் இக்கோவையின் XXXVIII ஆம் அத்தியாயத்தின்கீழ் தொடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் நியமிக்கப்பட்ட

விடத்து, அத்தகைய மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது உரிமைத் தத்துவக்காரர் சுருக்கமுறை நடவடிக்கை என்றவகையில் சத்தியக்கடதாசியின் ஆதாரத்துடன் வழக்காளியால் அல்லது அத்தகைய வழக்கிற்கான வேறு எவரேனும் திறத்தவரால் அல்லது அத்தகைய மரணசாதனத் தத்துவக்காரரால் அல்லது உரிமைத் தத்துவக்காரரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளின் இடத்திற்குப் பதிலீடு செய்யப்படவேண்டும் என்பதுடன் அதன்மீது வழக்கானது அத்தகைய மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது உரிமைத் தத்துவக்காரர் ஆரம்பத்திலேயே எதிராளியொருவராக ஆக்கப்பட்டிருந்ததான வழக்கில் முந்திய நடவடிக்கைகளுக்கான திறத்தவரொருவராகவும் இருந்தால் என்றுற்போன்றும் அதேமுறையில் நடைபெறுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 192 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 192 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*"என்ன விதத்தில் பணத்தின் மீதான வரி தீர்வையிடப்படலாம்.*

192. (1) வழக்கானது, வழக்காளிக்கு வருமதியான பணத்தொகையொன்றிற்காயின் நீதிமன்றமானது, எந்தச் சாதனத்தின்மீது வழக்குத் தொடுக்கப்பட்டதோ அந்தச் சாதனத்தால் இருதரத்தவர்களுக்கு இடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வீதத்தில், அல்லது அத்தகைய உடன்படிக்கை எதுவும் இல்லாதவிடத்து, சட்ட வீதப்படி, வழக்குத் தொடுக்கப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய பணமுதலின்மீது நீதித்தீர்ப்புப் பெற்ற ஏதேனும் வட்டிக்கு மேலதிகமாக அத்தகைய பண முதலின்மீது வழக்குத் தேதியிலிருந்து தீர்ப்பின் தேதிவரை நீதி தீர்க்கப்பட்ட ஏதேனும் வட்டிக்கு மேலதிகமாக, நீதித் தீர்ப்பின் தேதியிலிருந்து கொடுப்பனவுத் தேதிவரை அல்லது நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முந்திய தேதிவரை அவ்வாறு நீதித் தீர்க்கப்பட்ட கூட்டுமொத்தப் பணத்தொகைமீது அத்தகைய வீதப்படி மேலும் வட்டியுடன் சேர்த்து செலுத்தப்படவேண்டுமென நீதித் தீர்ப்பில் கட்டளையிடலாம்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "சட்டவீதம்" என்பது நடைமுறையிலுள்ள வங்கி வட்டி வீதங்களைக் கருத்திற்கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தலின்மூலம் பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பணச்சபையால் நிர்ணயிக்கப்படும் ஆண்டொன்றுக்கான நூற்றுவீதம் என்று பொருள்படும்.

(3) நீதித்தீர்ப்பின் தேதியிலிருந்து அல்லது கொடுப்பனவுத் தேதிவரை அல்லது முந்திய தேதிவரை மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய கூட்டுமொத்தப் பணத்தொகைமீது மேலும் வட்டியின் கொடுப்பனவு தொடர்பில் அத்தகைய நீதித்தீர்ப்பு மௌனம் சாதிக்குமிடத்து நீதிமன்றமானது அத்தகைய வட்டியை மறுத்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்காக புறம்பான வழக்கொன்று இருத்தல் ஆகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 398 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 398 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"காலஞ்சென்ற எதிராளியின் சட்டப் பிரதிநிதிகளின் பதிலீடு பற்றியது.

398. (1) ஒன்றுக்கு மேற்பட்ட எதிராளிகளிருந்து அவர்களுள் எவராவது நீதித் தீர்ப்பிற்குமுன்னர் இறப்பின் அத்துடன் பின்வாழும் எதிராளிக்கு அல்லது எதிராளிகளுக்கு எதிராக மட்டும் வழக்குகாரணத்தின்மீது வழக்குத் தொடுப்பதற்கான உரிமையும் எஞ்சியிருப்பின் அத்துடன் தனியொரு எதிராளியின் அல்லது வழக்குத் தொடுக்கும் உரிமை எஞ்சியிருக்குமிடத்து உயிர்வாழும் தனியொரு எதிராளியின் இறப்பின் விடயத்தில் வழக்காளி—

(அ) சுருக்கமுறை நடவடிக்கை என்ற வகையில் சத்தியக்கடதாசியை ஆதாரமாகக் கொண்டு, காலஞ்சென்ற எதிராளியின் சட்டப்பிரதிநிதியாக இருப்பதாக எந்த ஆளைச் சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளும் அவரது இடத்திற்கு எந்த ஆளை எதிராளியாக்க அவர் விரும்புகின்றாரோ அந்த ஆளுமாகிய எவரேனும் ஆளின் பெயரையும், விவரணத்தையும் வாழுமிடத்தையும் குறித்துரைத்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்,

அல்லது

(ஆ) காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச்சொத்தின் மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் வழங்கப்பட்டில்லாத விடத்து அல்லது அதன் வழங்கல் முறையல்லாது தாமதமடையும் சாத்தியமுள்ளவிடத்து, சுருக்கமுறை நடவடிக்கை என்ற வகையில், சத்தியக்கடதாசியை ஆதாரமாகக் கொண்டு, காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச்சொத்துக்கான மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளும் காலஞ்சென்ற எதிராளியின் இடத்திற்கு எந்த ஆளை எதிராளியாக்க விரும்புகின்றாரோ அந்த ஆளுமாக இருப்பதாக எந்த ஆளைச் சார்த்துரைக்கின்றாரோ அந்த எவரேனும் ஆளின் பெயரையும் விவரணத்தையும் வாழுமிடத்தையும் குறித்துரைத்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பம், காலஞ்சென்றவரின் மரபுரிமையாளராக அல்லது மரபுரிமையாளர்களாக வழக்காளி எந்த ஆளைச் சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயர், விவரணம் வாழுமிடம் என்பவற்றையும் குறித்துரைத்தல் வேண்டும்; அல்லது

(இ) அத்தகைய எதிராளி மரணசாதனமில்லாமல் இறந்துள்ளவிடத்து, சுருக்கமுறை நடவடிக்கை என்ற வகையில், சத்தியக்கடதாசியை ஆதாரமாகக்கொண்டு, அவர் காலஞ்சென்றவரின் சட்டப் பிரதிநிதியாகவிருப்பதாக எந்த ஆளைச் சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளும் அவரது இடத்திற்கு எந்த ஆளை எதிராளியாக்க விரும்புகின்றாரோ அந்த ஆளுமாகிய எவரேனும் ஆளின் பெயரையும் விவரணத்தையும் வாழுமிடத்தையும் குறித்துரைத்து நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பம், காலஞ்சென்றவரின் மரபுரிமையாளராக அல்லது மரபுரிமையாளர்களாக வழக்காளி எந்த ஆளைச் சார்த்துரைக்கின்றாரோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயர், விவரணம், வாழுமிடம் என்பவற்றையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன்மீது அதற்கான ஏதுக்கள் இருக்கின்றனவெனத் திருப்தியுற்றதாகப் பதிவேட்டில் அத்தகைய எதிராளியின் இடத்தில் அத்தகைய பிரதிநிதியின் பெயரைப் பதியலாம் என்பதுடன் வழக்கிற்கு எதிர்வாதம் கூறுவதற்கு அதன்கண் குறிப்பிடப்பட்ட ஒரு தினத்தில் தோன்றுமாறு அத்தகைய பிரதிநிதிக்கு (முதலாம் அட்டவணையிலுள்ள 61 ஆம் இலக்கப் படிவத்தில்) அழைப்பாணை விடுத்தல் வேண்டும் என்பதுடன் அதன் மீது வழக்கானது அத்தகைய பிரதிநிதி ஆரம்பத்திலேயே எதிராளியாக்கப்பட்டுள்ளார் என்றாற் போன்றும் வழக்கில் முன்னைய நடவடிக்கைகளுக்கான கட்சிக்காரரொருவராக இருந்தார் என்றாற்போன்றும் அதே முறையில் நடைபெறுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு எதிராளியாக்கப்பட்ட ஆள், காலஞ்சென்றவரின் சட்டப் பிரதிநிதி நான் அல்லவென ஆட்சேபிக்கலாம் அல்லது அத்தகைய பிரதிநிதி என்ற வகையில் அவரது இயல்புக்குந் தோதான ஏதேனும் எதிர்வாதம் செய்யலாம்.

(3) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்துக்கான மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லையென அல்லது அதன் வழங்கல் முறையில்லாது தாமதப்படும் சாத்தியமுண்டென நீதிமன்றமானது திருப்தியுறுமிடத்தும் அத்துடன் காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச் சொத்துக்கான மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளென அத்தகைய விண்ணப்பத்தில் சார்த்துரைக்கப்பட்ட ஆளுக்கும் அத்துடன் அத்தகைய வேறு ஆட்கள் எவரும் இருப்பின் அவர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னரும் அத்துடன் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை (முதலாம் அட்டவணையில் 71அ என்னும் இலக்கங்கொண்ட படிவத்தில்) நீதிமன்றத்

தால் தெரிவு செய்யப்பட வேண்டிய உள்ளூர் செய்தித் தாளொன்றில் அல்லது அத்தகைய வெளியீட்டிற்குப் பதிலாக நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய வேறு முறையில் விளம்பரப்படுத் தச் செய்ததன் பின்னரும் அத்துடன் அவசியமான தென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய விசா ரணையின் பின்னரும் அத்துடன் பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத் துக்கான மரணசாதன நிருவாகப் பத்திரம் சாதாரண மாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆளாக நீதிமன்றத்திற்குத் தோன்றும் ஆளின் பெயர், காலஞ் சென்ற எதிராளியின் இடத்திற்குப் பதிலாகப் பதிவேட் டில் பதியப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம் என் பதுடன் அதன் மீது வழக்கானது அத்தகைய ஆள் ஆரம்பத்திலேயே எதிராளியொருவராக ஆக்கப்பட்டி ருந்ததுடன் அவ் வழக்கில் முன்னைய நடவடிக்கைகளுக் குத் திறத்தவரொருவராக இருந்தார் என்றுற்போன்று நடைபெறுதலும் வேண்டும் :

ஆயினும் எவ்வாறுயினும், காலஞ்சென்ற எதிராளி யின் இறப்பிற்குப் பின் ஆறு மாதங்களைக் கொண்ட வொரு காலப்பகுதி கழிந்த பின்னர் மட்டுமே அத் தகைய கட்டளை ஆக்கப்படலாம் என்பதுடன் அவ் வாறு எதிராளியாக்கப்படவுள்ள ஆள், காலஞ்சென்ற எதிராளியின் விருப்பாவணத்தின் மரணசாதன அதி காரப்பத்திரம் அல்லது மரணச்சொத்துக்கான மர ணச்சொத்து நிருவாகப்பத்திரம் சாதாரணமாக எந்த ஆளுக்கு வழங்கப்படுமோ அந்த ஆள் தாம் அல்ல எனவும் அல்லது காலஞ்சென்ற எதிராளியின் இடத் திற்குத் தாம் எதிராளியாக்கப்படக்கூடாது எனவும் ஆட்சேபிக்கலாம் ; அத்துடன் அவரது பெயர் காலஞ் சென்ற எதிராளியின் இடத்திற்குப் பதிலாகப் பதி வேட்டில் பதியப்படுவதன்மீது காலஞ்சென்ற எதிராளி யின் பிரதிநிதி என்ற வகையில் அவரது தன்மைக்குத் தோதான ஏதேனும் எதிர்வாதமும் செய்யலாம்.

(4) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் (இ) என் னும் பந்தியின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன்மீது அதற்கான ஏதுக்கள் உள்ளனவெனக்

திருப்தியுற்று, அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிட்ட பிரதிநிதிக்கும் அத்தகைய வேறு ஆட்கள் இருப்பின் அவர்களுக்கும் அறிவித்தல் வழங்கியபின்னரும் அத்துடன் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை (முதலாம் அட்டவணையின் 71அ என்னும் படிவத்தில்) நீதிமன்றத்தால் தெரிவு செய்யப்படவேண்டிய உள்ளூர் செய்தித் தாளொன்றில் அல்லது அத்தகைய வெளியீட்டிற்குப் பதிலாக நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் விளம்பரப்படுத்தச் செய்ததன் பின்னரும் அத்துடன் அவசியமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும் அத்துடன் அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நீதிமன்றமானது அத்தகைய பிரதிநிதியின் அல்லது பொருத்தமானவரென நீதிமன்றம் கருதக்கூடியவரான அத்தகைய வேறு ஆளின் பெயர் காலஞ்சென்ற எதிராளியின் இடத்திற்குப் பதிலாகப் பதிவேட்டில் பதியப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன் அதன் மீது வழக்கானது, அத்தகைய ஆள் ஆரம்பத்திலேயே எதிராளியொருவராக ஆக்கப்பட்டிருந்ததுடன் அவ்வழக்கில் முன்னைய நடவடிக்கைகளுக்குந் திறத்தவரொருவராக இருந்தார் என்றாற்போன்று நடைபெறுதலும் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும் காலஞ்சென்ற எதிராளியின் இறப்பிற்குப்பின் ஆறு மாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதி கழிந்தபின்னர் மட்டுமே அத்தகைய கட்டளை ஆக்கப்படலாம் என்பதுடன் அவ்வாறு எதிராளியாக்கப்படவுள்ள ஆள், காலஞ்சென்ற எதிராளியின் சட்டப் பிரதிநிதி தாம் அல்லது எனவும் அல்லது தாம் காலஞ்சென்ற எதிராளியின் இடத்திற்கு நியமிக்கப்படக்கூடாது எனவும் ஆட்சேபிக்கலாம்; அத்துடன் அவரது பெயர் காலஞ்சென்ற எதிராளியின் இடத்திற்குப் பதிலாகப் பதிவேட்டில் பதியப்படுவதன்மீது காலஞ்சென்ற எதிராளியின் பிரதிநிதி என்ற வகையில் அவரது தன்மைக்குத் தோதான ஏதேனும் எதிர்வாதம் செய்யலாம்.

(5) இறந்த எதிராளியொருவரின் சட்டமுறையான பிரதிநிதியானவர், இறந்த எதிராளிக்கு ஒருவருக்குப் பதிலாகத் தாம் எதிராளியொருவராக ஆக்கப்படுவதற்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவை ஏற்புடைத்தாகக் கூடியவாறான அளவு விண்ணப்பத்துக்கும், அத்தகைய விண்ணப்பத்திலிருந்து எழுகின்ற வழக்கு நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டபின்னர் நிறைவேற்றுநர் ஒருவர் அல்லது நிருவாகி ஒருவர், இச்சட்டக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கையில் நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, சுருக்க நடவடிக்கை முறை என்ற விதத்தில், வழக்காளியினால் அல்லது வழக்கிற்கான எவரேனும் வேறு கட்சிக்காரரினால் அல்லது அத்தகைய நிறைவேற்றுநரினால் அல்லது நிருவாகியினால் சத்தியக்கடதாசியோடுகூடிய விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதன்மேல், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளுக்குப் பதிலாக அத்தகைய நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி நியமிக்கப்படல் வேண்டும், அத்துடன் அதன்மேல் வழக்கானது, அத்தகைய நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ஆரம்பத்திலேயே எதிராளியொருவராக ஆக்கப்பட்டு வழக்கின் முந்திய நடவடிக்கைகளில் கட்சிக்காரரொருவராக இருந்திருந்தாற் போன்று அதேவிதத்தில் வழக்குத் தொடருதல் வேண்டும்".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 405 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

5. முதன்மைச்சட்டவாக்கத்தின் 405 ஆம் பிரிவானது, "39 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் செய்யப்படலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 398 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பம் செய்யப்படலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 705அ, 705ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.**

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 705 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 705அ, 705ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பதிவு அஞ்சல் மூலம் அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்

705அ. (1) அழைப்புக்கட்டளை, சாதாரணமாக பதிவஞ்சல் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில், அழைப்புக் கட்டளை பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்படலாம், அல்லது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எதுவும் இல்லாதிருந்தால், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது குழுவின் பிரதான தொழிலிடத்தில் சேர்ப்பிக்கப்படலாம் ;

(ஆ) எதிராளி பகிரங்க அலுவலர் ஒருவராக இருக்குமிடத்து, எதிராளியானவர் எத்திணைக்களத்தில் ஊழியம் செய்கின்றரோ, அத்திணைக்களத்தின் தலைவருக்குப் பதிவுத் தபால் மூலம் நீதிமன்றம் அழைப்புக் கட்டளை அனுப்பலாம் என்பதுடன், எதிராளிக்கு அழைப்புக் கட்டளையைத் தாமே சேர்ப்பிப்பது, திணைக்களத்தின் அத்தகைய தலைவருக்குக் கடமையாதலும் வேண்டும்.

(இ) எதிராளி இன்னேர் ஆளினல் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ளார் என நீதிமன்றம் முதற்றேற்ற அளவில் திருப்திப்படுமிடத்து, நீதிமன்றமானது, அழைப்புக்கட்டளையை, தொழில் தருநருக்கு, அவரின் வழமையான தொழிலிடத்துக்கு அனுப்பலாம், அல்லது தொழில் தருநர் கம்பெனியொன்ருக அல்லது கூட்டுத் தாபனமொன்ருக இருக்குமிடத்து, கம்பெனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் செயலாளருக்கு, முகாமையாளருக்கு அல்லது அதே போன்ற வேறு அலுவலருக்கு அனுப்பலாமென்பதுடன், எதிராளிக்கு அழைப்புக் கட்டளையைத்தாமே நேரடியாகச் சேர்ப்பிப்பது, விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய தொழில் தருநரின் அல்லது அலுவலரின் கடமையாதலும் வேண்டும்.

(3) எதிராளி தவிர்ந்த வேறேர் ஆளுக்குப் பதிவு அஞ்சல் மூலம் அழைப்புக் கட்டளைகள் அனுப்பப்படுகின்றவிடயத்தில், நீதிமன்றமானது அத்தகைய அழைப்புக் கட்டளைகளின் இணைப்பிரதியொன்றினையும் அனுப்புதல் வேண்டும். அத்துடன், அத்தகைய இணைப்பிரதியை, அழைப்புக் கட்டளையானது எதிராளியினல் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதற்கான அவரின் கூற்றுடன் அல்லது அவரிடம் அது சேர்ப்பிக்கப்பட்டதற்கான, கூற்றுப்பற்றிய புறக்குறிப்பொன்றுடனும், அத்துடன், அதைச் சேர்ப்பித்த ஆளின் கையொப்பத்துடனும், அத்துடன், எவ்வாளுக்கு நீதிமன்றத்தினல் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டதோ, அவ்வாள், அதைத் தாமே சேர்ப்பித்திருக்கவில்லையாயின், அவ்வாளினல் மேலொப்பமிடப்பட்டும், உடனடியாக நீதிமன்றத்துக்கு அனுப்புதல் விடயத்துக்கேற்றவாறு, திணைக்களத்தின் அத்தகையதலைவருக்கு, தொழில் தருநருக்கு அல்லது அலுவலருக்குக் கடமையாதல் வேண்டும்.

(4) எதிராளியொருவர் அவரிடம் மேலே குறிப்பிடப்பட்டவாறு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதன் மேல், தாமே நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து, அவர், விடயத்துக்கேற்றவாறு, அவருடைய தேசிய அடையாள அட்டையை அல்லது வலிதுடைய கடவுச்சீட்டொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், தமக்குமுன் தோன்றிய ஆளும், மேலே சொல்லப்பட்

வாறு எவ்வாளிடம் அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப் பட்டதோ, அவ்வாளும் ஒருவரே எனத் தம்மைத் திருப் திப்படுத்திக்கொள்வது நீதிபதிக்குக் கடமையாதலும் வேண்டும்.

(5) எதிராளியொருவர், பதிவுபெற்ற சட்டத்தரணி யொருவரினுல் பிரதிநிதித்துவம் செய்யப்படுமிடத்து, சட்டத்தரணியானவர் எதிராளியின் சார்பில் சமர்ப் பிக்கப்படும் பதிவுப்பத்திரத்தில், விடயத்துக்கேற்ற வாறு, எதிராளியின் தேசிய அடையாள அட்டையின் அல்லது கடவுச் சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எதிராளியின் அடையாளத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற புறக்குறிப் பொன்றையும் அதன்மேல் இடுதலும் வேண்டும். கம் பெனியொன்றின் சார்பில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சார்பில் பதிவுப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, அது, விடயத்துக் கேற்றவாறு, அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையின் கீழ் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில்—

"திணைக்களத் தலைவர்"—

(அ) இலங்கைத் தரைப்படையின், கடற்படை யின் அல்லது விமானப் படையின் ஏதே னும் பிரிவின் உறுப்பினர் ஒருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, அப்பிரிவின் தண்டநாயக அலுவலர் எனப் பொருள்படும்;

(ஆ) உள்ளூரதிகாரசபையொன்றில் ஊழியம் செய்கின்ற ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, அவ்வுள்ளூ ரதிகாரசபையானது மாநகர சபை யொன்ருக இருந்தால், அச் சபையின் மாநகரசபை ஆணையாளர் எனப் பொருள்படும்; உள்ளூரதிகாரசபை யானது, நகரசபையொன்ருக அல்லது பிரதேசசபையொன்ருக இருந்தால், அந்நகர சபையின் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள் படும்; அத்துடன்

(இ) வேறு எவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய ஆள், எவ்வரசாங்க திணைக் களத்தில் ஊழியம் செய்கின்றாரோ, அவ்வரசாங்க திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்; அத்துடன்

"தேசிய அடையாள அட்டை", ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையெனப் பொருள்படும்.

**நேரடியாகச் சேர்ப்பித்தல்.**

705ஆ. (1) அழைப்புக்கட்டளை அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்டபின்னர் எதிராளி சமுகமளிக்கத்தவறுகின்றவிடத்து, நீதிமன்றமானது, எவரேனும் நீதிமன்ற அழைப்புக்கட்டளை அலுவலர் ஊடாகச் சொல்லப்பட்ட அழைப்புக்கட்டளை அவரிடம் ஒப்படைக்கப்படுவதன் மூலம் அல்லது கொடுக்கப்படுவதன்மூலம், அல்லது வழக்காளி, 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பணம் வழங்கும் நிறுவனமாக இருக்குமிடத்து, பிசுக்கால் மூலமாகவோ அல்லது நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் மூலமாகவோ சொல்லப்பட்ட அழைப்புக் கட்டளை நேரடியாகச் சேர்ப்பிக்கப்படல் வேண்டும் எனப் பணித்தல் வேண்டும். கூட்டுத்தாபனம் ஒன்றின் விடயத்தில், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் செயலாளரிடம் அல்லது அதே போன்ற அலுவலரிடம் அல்லது பணிப்பாளரிடம் அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளிடம் நேரடியாக ஒப்படைக்கப்படுவதன் மூலம் அல்லது கொடுக்கப்படுவதன் மூலம் அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள சேர்ப்பிப்பானது போதிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகிப்பதன்மூலம் பயனுறுத்தப்பட முடியாதிருந்தால், பிசுக்கால் அல்லது

அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர், எதிராளி சாதாரணமாக வதிகின்ற வீட்டின் துலாம்பரமான ஏதேனும் இடத்தில், அல்லது, கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது குழுவின் வழமையான தொழிலிடத்தில் அல்லது அலுவலகத்தில் நைசைத் தீர்வை ஒட்டுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் நைசைத் தீர்வையானது எதிராளியிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். **ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.**

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.**

(1) 2 ஆம் படிவத்தை உடனடுத்து பின்வரும் புதிய படிவத்தை இடுவதன் மூலம், இது, அட்டவணையின் 2அ என்னும் படிவமாகப் பயனுறுதல் வேண்டும்.

"இல. 2அ (பிரிவு 14அ)

உத்தேசிக்கப்பட்டுள்ள வழக்கொன்றின், இறந்த எதிராளியின் இடத்தில் எதிராளி ஒருவராக ஆளொருவர் நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் அறிவித்தல் படிவம்.

(தலைப்பு)

வழக்காளி என்றவகையில் ...................... ஆகிய மேல் பெயர் குறிப்பிடப்பட்டவர்.................... ஆகிய மேல் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கெதிராக இந் நீதிமன்றத்தில் மேல் பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கொன்றைத் தொடுத்துள்ளார், ஆதலாலும், எவருக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டதோ அவர் இறந்துவிட்டாராதலாலும் அவருக்குப் பதிலாக................................ என்னும் முகவரியைச் சேர்ந்த ................................ என்பவர் எதிராளி ஆக்கப்பட வேண்டுமென விரும்பி நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்துள்ளார் ஆதலாலும்,

காலஞ்சென்றவரான சொல்லப்பட்ட ................................ என்பவரின் ஆதனத்தில் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் நிறைவேற்றுநர், நிருவாகி அல்லது மரபுரிமையாளர் என்றவகையில் அக்கறையுள்ள எவரேனுமாள் 19 ......... ஆம் ஆண்டு ................. மாதம் ......... ஆந் நாளன்று முற்பகல் .............. மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அத்தகைய விண்ணப்பம் ஏன் வழங்கப்படுதலாகாது என்பதற்கு காரணம் ஏதேனுமிருப்பின் அதனைக் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

19 ........... ஆம் ஆண்டு ............... மாதம் ...........ஆந் நாளாகிய இன்று.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

நீதிமன்றப் பதிவாளர்.".

(2) எழுபத்தோராம் படிவத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தை உட்புகுத்துவதன் மூலம் இது அந்த அட்டவணையின் 71அ என்னும் படிவமாகப் பயனுறுதல் வேண்டும்.

" இல. 71அ (பிரிவு 398)

ஆளொருவர் காலஞ்சென்ற எதிராளியொருவரின் இடத்திற்கு நியமிக்கப்பட வேண்டும் என்னும் ஒரு விண்ணப்பம் பற்றிய அறிவித்தல்.

(தலைப்பு)

மேலே பெயர் குறிப்பிட்ட .................................... வழக்காளி என்றவகையில் இறந்துள்ளவரான மேலே குறிப்பிட்ட .................................... என்பவருக்கெதிராக இந்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார் ஆதலாலும் அவருக்குப் பதிலாக .................................... என்ற இடத்தைச் சேர்ந்த .................................... என்பவர் எதிராளியாக்கப்படவேண்டுமென விரும்பியவராக நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்திருக்கிறார் ஆதலாலும்,

காலஞ்சென்றவரான சொல்லப்பட்ட .................................... என்பவரின் ஆதனத்தில் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் நிறைவேற்றுநர், நிருவாகி அல்லது மரபுரிமையாளர் என்றவகையில் அக்கறையுள்ள எவரேனுமாள் 19 ......... ஆம் ஆண்டு .................. மாதம் ......... ஆந் நாளன்று முற்பகல் ............... மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அத்தகைய விண்ணப்பம் ஏன் வழங்கப்படுதலாகாது என்பதற்கு காரணம் ஏதேனுமிருப்பின் அதனை காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

19 ............ ஆம் ஆண்டு ............... மாதம் ............ஆந் நாளாகிய இன்று.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

நீதிமன்றப் பதிவாளர்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.